AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 2

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## நலம் தரும் புன்னைநல்லூர்

- ஆகஸ்ட் மாத ராசிபலன்கள்
- மூலிகை ரகசியம்
- ஆடி 18ன் சிறப்புகள்
- கால சர்ப்ப தோஷம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்!

என்றார் திருவள்ளுவர்! நாம் எதுவாக ஆக வேண்டுமோ? நமக்கு எது வேண்டுமோ அதுவாக அதையே திரும்பத்திரும்ப உருப்போட வேண்டும். மனதில் உருப்போடும் அந்த எண்ணம் கருவாகி, நிச்சயம் ஒருநாள் உருப்பெறும்! இப்படிக்குதான் மந்திரங்களை உறுபோட்டு காரியசித்தி பெறுகிறார்கள்.

~ Dr. Baskaran Pillai



அன்பிற்கினிய வாசகர்களே!

நமது சத்வித்யா இ-புக் இது இரண்டாவது இதழ்! இந்த இதழ் ஆடிமாத சிறப்பு மலர் என்ற தகுதியோடு வெளியாகிறது
ஆடி மாதம் என்பதனை ஆன்மிக மாதம் என்பார்கள் அம்மன் மாதம் என்றும் சொல்வார்கள் அன்பர்களால் அம்மன் என போற்றி வணங்கப்படும் சக்தி தேவியின் சாந்நித்யம் மிகுந்து காணப்படும் மாதம் இது!

ஊரெங்கும் ஆலயங்கள் ஆலயமெல்லாம் விழாக்கோலங்கள் கொண்டாட்டங்கள் என ஆன்மிகப்பேரொளி பரவுகின்ற இந்த மாதத்தில் நம்மை பல மாதங்களாக சிறைப்படுத்தி வைத்திருக்கும் கொரோனா என்னும் அரக்கனிடமிருந்து அருள்மிகு அன்னை விடுதலை பெற்றுத் தருவாள் என்னும் நம்பிக்கையோடு வணங்கிப் பணிவோம்.

இறையருளோடு,

அச்சிட்டு வெளியிடுவோர் ஆஸ்ட்ரோவேட்.காம்

# நலம் தரும் புன்னைநல்லூர்

புன்னைநல்லூர் மாரியம்மன் அங்கு வெளிப்பட்டதே ஓர் அதிசயம்தான். மராட்டிய ஆட்சியைத் தஞ்சையில் நிலை நிறுத்தியவர் வெங்கோஜி மகாராஜா சத்ரபதி (1676 -1683). கி.பி. 1680- ம் ஆண்டு தீர்த்த யாத்திரை கிளம்பிய மகா ராஜா திருச்சிக்கு அருகேயுள்ள சமயபுர அம்மனைத் தரிசித்து விட்டு, அங்கேயே தங்கினார். அன்றிரவு மன்னர் உறங்குகையில் அவர் கனவில் காட்சியளித்த அன்னை மாரி, "மன்னா! மாரியான நான் புற்று வடிவில் புன்னை வனத்தில் அருவமாக உள்ளேன். தஞ்சைக்கு அருகில் (ஏறத்தாழ ஐந்து கி.மீ. தொலைவில்) இருக்கும் என்னை வந்து தரிசனம்செய்! நலம் உண்டாகும் உனக்கு" என்று கூறி மறைந்தார்.

அன்னையே கூறிய பிறகு அரசர் மறுப்பாரா? நேரே போய், அன்னை குறிப்பிட்ட புன்னை வனத்தில் புற்று வடி வாக இருந்த அன்னையை வெளிப்படுத்தி, அனைவரும் தரிசிக்கும்படியாகச் செய்தார்; காட்டை அழித்துப் பாதைகள் ஏற்படுத்தினார்; வெயில்-மழை ஆகியவற்றால், புற்றுவடிவான அன்னைக்குப் பாதிப்பு வராமலிருக்க ஒரு சிறு கூரையும் அமைத்தார். மன்னர் மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட அந்த அன்னைதான், "தஞ்சை புன்னைநல்லூர் ஸ்ரீ மகாமாரியம்மன்.



இதன்பின் மன்னரின் மகன் துளஜ ராஜா மன்னராகப் பதவியேற்ற பின், அவர் மகளுக்கு அம்மை நேர்கண்டு கண் பார்வை குறையத் தொடங்கியது. வழியறியாது தவித்த மன்னரின் கனவில் காட்சி கொடுத்த அன்னை, "மன்னா! புன்னை நல்லூரில் இருக்கும் என் சன்னதிக்கு உன் மகளுடன் வந்து தரிசனம்செய்! உன் மனத்துயர் தீரும்" என்றருளி மறைந்தார்.

மறுநாளே மகளுடன் மாரியம்மன் சன்னதிக்கு விரைந்தார் மன்னர்; மகளுக்காக மனமுருகி மாரியம்மனிடம் பிரார்த்தித்தார் மன்னர்.சன்னதியில் தீபாராதனை காட்டினார்கள். அதேநேரத்தில் மன்னர் மகளின் கண்களில் இருந்து ஏதோ ஒன்று கருகிப்போய்க் கீழே விழுந்தது; "அப்பா! அப்பா! எனக்குப் பார்வை நன்றாகத் தெரிகிறது" எனக்கத்தினாள் மன்னர் மகள். அம்மன் அருளை நினைந்து நெகிழ்ந்தார் மன்னர்.

மனம் நெகிழ்ந்த மன்னர் மாரியம்மனின் கூரைக்கொட்டகையை நீக்கி, அழகான சிறுகோவில் ஒன்றைக்கட்டினார். கூடவே வேறொரு விருப்பமும் தோன்றியது மன்னருக்கு!" புற்று வடிவில் இருந்து

அருள்புரியும் இந்த அம்மனுக்கு, புது வடிவம் கொடுக்க வேண்டும்” என எண்ணினார் மன்னர். அப்போது அம்பிகையே அனுப்பி வைத்ததைப்போல, சத்குரு ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திர சுவாமிகள் அங்கு வந்தார். வந்தவர்; மன்னரின் விருப்பத்தை உணர்ந்து, புற்று மண்ணைக்கொண்டே மகாமாரியம்மனின் திருவுருவை அமைத்தார்; அத்துடன் சத்குரு சக்கரத்தையும் பிரதிஷ்டை செய்தார். (இவ்வைபவம் நடந்த ஆண்டு கி.பி. 1735)

ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில், தஞ்சைப் பகுதியில் வில்ஸன் என்பவர் கலெக்டராக இருந்தார். அவர் புன்னை நல்லூர் பக்கம் வந்தபோது, அம்மன் திருவிழாவை முன்னி ட்டு அலகு குத்துதல் முதலான நேர்த்திக்கடன்களுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.அதைக்கண்ட கலெக்டர், ”இவர்களும்... இவர்கள் செயல்களும்... முட்டாள்கள்” என்று இகழ்ந்து கேலி செய்தார். தன்னை இகழ்ந்தால் பொறுத்துக் கொள்ளும் அம்பிகை, தன் அடியார்களை இகழ்ந்தால் பொறுக்க மாட்டாள். விளைவு? வீடு திரும்பிய கலெக்டருக்குப் பார்வை பறிபோனது, உடலெங்கும் அம்மை கொப்புளங்கள் வெளிப்பட்டன. கலெக்டருக்குத் தான்செய்த தவறு புரிந்தது, “மன்னித்து விடு தாயே!” என்று அழுதுதொழுது ஆத்மார்த்தமாக வேண்டினார். மன்னிக்க வேண்டிய அவருக்கு அப்போதே அருள்மழை பொழிந்தாள் அன்னை; கலெக்டரின் பார்வை திரும்பியது; உடலில் இருந்த கொப்புளங்களும் மறைந்தன. அயல்நாட்டுக்காரர் அன்றுமுதல் அன்னையின் அடியவரானார்.

நோய்கள், விரோதிகளால் உண்டாகும் பயம் ஆகியவற்றை நீக்கி நம்மைக் கட்டிக்காக்கும் புன்னை நல்லூர் மாரியம்மனுக்கு பூச்சொரிதல் விழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. மனம் எனும் மலரை அந்த மாரியம்மனின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்வோம்! மங்கல வாழ்வைப் பெறுவோம்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்



# எண் கணிதத்தில் பெயர் எண்களின் சிறப்பு

கடந்த இதழில் சிறப்பு பெயர் எண்களில் 1 மற்றும் 2 எண்களில் உள்ள அதிர்ஷ்டகரமான பெயர் எண்களைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக 3, 4, 5 ஆகிய எண்களில் அதிர்ஷ்ட பெயர் எண்களை இந்த இதழில் பாப்போம்.



3 என்பது ராஜகிரகம் எனப்படும் குரு கிரகத்தின் ஆதிக்கம் கொண்டது. கோள் சாரப்படி குரு பார்க்க கோடி நன்மை என்று சொல்வழக்கு உண்டு! அது போலவே தான் சேர்ந்த இடத்தை சுபிட்சமாகவும் அதிர்ஷ்டமாகவும் மாற்றும் 3 என்ற எண்ணில் 3, 12, 21, 30, 39, 48, 57, என்ற வரிசையில் பெயர் எண் வைக்க நன்மையே உண்டாகும், ஆனால், ஒருவரின் பிறந்த எண்ணும் விதி எண்ணும் ஓரளவு நன்மை செய்பவையாக இருந்தால் மேற்கண்டவாறு 3 என்ற எண் வரும்படி பெயர் அமைப்பது நலம்! பிறந்த எண்ணும் விதி எண்ணும் பலமற்றதாக இருந்தால் 3 என்ற பெயர் எண் வைப்பதால் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்க முடியாது.

அடுத்த நான்காம் எண்! ராகு கிரகத்தின் ஆதிக்கத்தில் அமைவது 4 என்ற எண் 4, 13, 22, 31, 40 என்றெல்லாம் பெயர்களை வைக்கும்போது, நல்லவை கெட்டவை எது நடந்தாலும் எதிர்பாராத வகையிலேயே அமையும். எனவே, 4 எண்ணில் பெயர் எண் வருவதை யாரும் பெரிதும் விரும்பமாட்டார்கள் குறிப்பாக, 31 என்று வரும்படி பெயர் வைத்தால் அவர்கள் தன்னுடைய 31வது வயதில் துன்பமயமான வாழ்வினை சுமார் 6 வருடங்கள் தொடர்ந்து அனுபவித்து தங்கள் 37வது வயதில் தான் ஓரளவு முன்னேற முடியும். 40 என்று வருமாறு பெயர் வைத்தால் எல்லா நலன்களும் அமைந்தாலும் நட்பு மற்றும் நண்பர்களால் ஏமாற்றம் அடைவதும் கைவிடப்படுவதும் நிகழும் எனவே 4 எண் வருமாறு பெயர் வைப்பதில் கவனம் தேவை.

எண் கணிதப்படி 9 எண்களில் மைய எண் எனப்படுவது 5 எண்ணாகும் இந்த எண்ணில் பிறந்தாலும் பெயர் எண் 5 என்று வரும்படி அமைந்தாலும் அந்த நபர் அனைவராலும் விரும்பப்படுவார். ஈர்ப்பு சக்தி நிறைந்தவராக இருப்பார் 5, 14, 23, 32, 41, 50, 59 என்ற வரிசையில் பெயர் எண் அமைப்பார்கள். இதில் 23 என்ற எண்ணில் பெயர் அமைந்தால் பிரபலமும் பெயரும் புகழும் கிடைக்கும். 32 என்ற எண்ணில் பெயர் வைத்தால் அறிவுச்சுடராக ஜொலிப்பார்கள். அதே நேரத்தில் இன்பமும் துன்பமும் மாறி மாறி

வருகின்ற அமைப்பைக் குறிக்கும். 41 என்ற எண் மிகவும் அதிர்ஷ்டகரமானது அபரிமிதமான முன்னேற்றத்தையும் செல்வாக்கையும் கொடுக்கும். வியாபார நிறுவனங்களுக்கு 41 என்று வரும்படி பெயர் வைத்தால் வியாபார விருத்தியும் செல்வ வளமும் உண்டாகும். 59 என்று வருமாறு பெயர் வைத்தால் எழுத்தால் ஐஸ்வர்யம் உண்டாகும்.

பிறந்த எண், விதி எண் இரண்டு மே 5 எண்ணாக வரும்போது பெயர் எண் 5 வரும்படி வைக்கக் கூடாது, தொடர்ந்து அடுத்து இதழில் பார்ப்போம்.

~ பன்னீர்செல்வம்



# விநாயகர்

"சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசி வர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே"

ஓரளவிற்காவது நமக்குத் தெரிந்த துதி இது. இதன் பொருள்: சுக்ல அம்பர தரம் - வெண்மையான (பட்டு) ஆடை உடுத்தி இருப்பவர். 'மின்னாம் எனவே விளங்கு பட்டழகும' என்பார் நக்கீரர்.

விஷ்ணும் - அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியிருப்பவர். சந்து - பொந்துகளில், சாணியில் - மஞ்சளில், வெல்லத்தில், வெயில் - மழை தாக்கும் வெட்ட வெளியில், நடுத்தெருவில், நடு வீட்டில், குளக்கரையில், மரத்தடியில் என எங்கும் இருந்து அடியார்களின் வழிபாட்டை ஏற்று, அவர்களுக்கு அருள்புரியும் யானைமுகப்பெருமான் வியாபகத்தை அறிவிக்கிறது

சசி வர்ணம்(நிறம்) - சசம் என்ற சொல் முயலைக் குறிக்கும்; சந்திரனில் உள்ள களங்கத்தை -கறையை 'முயற்களங்கம' என்பர். சந்திரனின் இயற்கை நிறம் வெண்மை; அதன் உள் காட்சி கருமை; இந்த நிறக்கலப்பே 'சசி வர்ணம' எனப்படும். 'நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்' என்று ஔவையார் விநாயகர் அகவலில் இந்த சசிவர்ணத்தைக் குறிப்பிடுகின்றார். சந்திரனின் உள் உள்ள நிறம் கொண்டவர் விநாயகர்; அந்தத் திருமேனி மேல் வெண்மையான திருநீறு. வெள்ளை வாரணப் பிள்ளையார் எனக் கூறுவோம்.



சதுர்புஜம் - நான்கு திருத்தோள்களை உடையவர்.

ப்ரஸன்ன வதனம் - யானை முகம் கொண்டவர். 'ப்ரஸந்நோ மத்த

வாரண : 'என்பது நிகண்டு. அதன்படி யானை முகம் கொண்டவர் என்பது பொருள். 'ஒருகோடு முகத்தணிந்த பிரசன்ன விநாயகரை' என்பது கணபதி புராணக் கடவுள் வாழ்த்து.

இப்படிப்பட்ட விநாயகரை ஊன்றி ஒருமித்த மனதோடு வழிபட்டால், இடையூறுகள் எல்லாம் நீங்கும; சிந்தையை விட்டு அகலாத ஆனந்தம் வரும். சுக்லாம்பரதரம் - எனும் ஸ்லோகத்தின் பொருள் இது. விநாயகரை வழிபடுவோம் வினைகள் நீங்கும். ஆனந்தம் மேவும்.

## பிள்ளையார் சுழி

எழுதத் தொடங்குகையில், பிள்ளையார் சுழி போட்டுத்தொடங்குவோம். அது எதை உணர்த்துகிறது என்பதைப் பார்க்கலாம். உலக மொழிகளில் எதுவாக இருந்தாலும் சரி! முழு வட்டம்,அரை வட்டம், கோடு- எனும் மூன்றுக்குள் அடங்கும்.இந்த மூன்றும் இணைந்தது பிள்ளையார் சுழி. எழுத்து என்பது தெய்விகம் என்பதை உணர்த்துவதற்காகவே, எல்லா வழிபாடுகளிலும் முதற்பூஜை பெறும் பிள்ளையாரை நினைத்து இடப்படுவதால், பிள்ளையார் சுழி எனப்படுகிறது.

## அல்லாப் பிள்ளையார்

பலவிதமான பேதங்கள் மனிதர்களிடம் மட்டுமே உண்டு. தெய்வத்திற்கோ தெய்வ அருளுக்கோ எந்த விதமான பேதமும் கிடையாது என்பதை விளக்கும் இந்நிகழ்வு தஞ்சையில் நடந்தது. தஞ்சையில் முத்துப்பேட்டை எனும் ஊர் உள்ளது. அங்கு ரயில் பாதைக்குக் குறுக்காக அமைந்த சாலையில், ரயில் போக்குவரத்தின் போது இரு பக்கங்களிலும் பெரும் கதவுகளைக் கொண்டு மூடி விடுவார்கள். இந்தப் பக்கமும் அந்தப்பக்கமுமாகப் பல வண்டிகள் காத்திருக்கும். மூடப்பட்ட கதவுகளுக்கு சற்றுதள்ளி, சாலை ஓரமாகப் பேருந்துகளுக்காகப்பயணிகள் தங்கும் இடம் ஒன்றிருந்தது.

அத்தங்குமிடத்தில் இஸ்லாமியப் பெண்மணி ஒருவர், கையில் ஒரு துணிப்பையும் மடியில் ஒரு குழந்தையுமாக அமர்ந்திருந்தார். கணவர் வீட்டில் நடக்கும் கொடுமைகளைத்தாங்க முடியாமல், தாய் வீட்டிற்குப் போவதற்காக அப்பெண்மணி பேருந்து நிலையத்திற்கு வந்திருந்தார். தன் அவலநிலையை எண்ணி, அப்பெண்மணி மனம் கலங்கியி ருந்த அவ்வேளையில், அவர் மடியிலிருந்த குழந்தை மெள்ள இறங்கி சாலையில் சென்று விட்டது. அதே நேரம் ரயில் பாதையின் கதவுகள் திறக்கப்பட, காத்திருந்த வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்ல, சீறிப்பாய்ந்து புறப்பட்டன.

குழந்தை சாலையின் மையப்பகுதியில் இருந்தது. அப்போது குழந்தையின் பின்னாலிருந்த ஒரு லாரி, எந்நேரத்திலும் குழந்தையின் மீது ஏறி விடக்கூடிய நிலை; அதைக்கண்ட மக்கள் பெருங்கூச்சல் இட்டார்கள். கூச்சலைக் கேட்ட தாய், தன் நினைவு பெற்று விவரம் உணர்ந்தார்; தன்னிலை மறந்து, "அல்லா! அல்லா!" எனக்கத்தினார்.

அப்போது, சாலையின் மறுபக்கத்தில் இருந்து ஒரு பெரும்பாறை வெகுவேகமாக உருண்டோடி வந்து, குழந்தைக்கும் லாரிக்கும் இடையில் அப்படியே நின்றது. லாரி அப்படியே நிற்க, போக்குவரத்து நின்றது. பாறையை எடுத்தால்தான் போக்குவரத்து செயல்படக் கூடிய நிலை. குழந்தைகாப்பாற்றப்பட்டு விட்டது. பெரும்பாறையைப் பலர் சேர்ந்து நகர்த்த, தாயார் ஓடிவந்து குழந்தையைத் தூக்கினார். அப்போது அங்கிருந்த அனைவருக்கும் ஒரு வியப்பு! "மலை எதுவுமில்லாத தஞ்சைப்பகுதியில், அதுவும் முத்துப்பேட்டையிலோ அதன் அருகிலோ மலை ஏதுமில்லாத இங்கு, இப்பெரும்பாறை இங்கு எப்படி வந்தது? பலர் சேர்ந்தும் தூக்கமுடியாத பாறை சரியாக உருண்டோடிவந்து, குழந்தையைக் காத்தது எப்படி?" என்று வியந்து பார்த்தார்கள்.

அங்கே பாறை உருண்டுவந்த பக்கத்தில் அழகிய விநாயகர் திருவடிவம் ஒன்றிருந்தது. அப்புறம் என்ற? லாரிகள், பேருந்துகள், மற்ற வாகனங்கள் என, வண்டிகளில் இருந்த வர்கள் இறங்கி, மூங்கில் கழிகள்- தென்னை ஓலைகள் - கயிறனஅனைத்தையும் வாங்கி வந்தார்கள்.

இஸ்லாமியத்தாயார் குழந்தையுடன் அமர்ந்திருந்த இடத்திலேயேஓர் அழகுப்பந்தலை இட்டு, அதில் விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்தார்கள். "அல்லா! அல்லா!" எனக்குரலிட்ட அத்தாயின் மனக்கலக்கத்தைத் தீர்த்த அவ்விறைவனுக்கு "அல்லாப்பிள்ளையார்" எனத் திருநாமமும் சூட்டினார்கள். 1970- ம் ஆண்டு நடந்த நிகழ்வு இது. அல்லாப்பிள்ளையார் இப்போது பந்தலில் இல்லை; அழகானதோர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிறார். தெய்வம் பேதம் பார்ப்பதில்லை; தெய்வஅருளை வேண்டுபவர்கள் பேதம் கொள்ளக்கூடாது என்பதை விளக்கும் நிகழ்விது.



~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்



# சித்தர் பூமி

## கணக்கம்பட்டி மூட்டை சுவாமிகள்

நமது சத்வித்யா வாசகர்களுக்கு இந்த இதழில் நாம் அறிமுகம் செய்யவிருக்கும் சித்தருடைய ஜீவசமாதி, மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

பழனியிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் 8வது கிலோமீட்டரில் கணக்கம்பட்டி என்று ஊரில் அமைந்துள்ள, சற்குரு பழனிச்சாமி சாமிகள் என்கிற மூட்டை சுவாமிகள் ஜீவசமாதியை தரிசனம் செய்து எல்லா வளமும் பெற முயற்சிப்போம்.

இங்கு அடக்கமாகியுள்ள மகானை மூட்டை சுவாமிகள் என்று சிலரும் கணக்கம்பட்டி சுவாமிகள் என்று சிலரும் சொல்வார்கள். இன்னும் அனேகர் இவரை சித்தயோகி என்று கொண்டாடினர். இன்று இவர் ஐக்கியமாகி சுமார் 6 ஆண்டுகள் கடந்த நிலையில், எல்லா பக்தர்களுமே சற்குரு என்று மன நிறைவோடு புகழ்கின்றனர். இவர் யார்? இவரது பெயருக்கான காரணங்கள் என்ன? இந்த மகானின் மகத்துவங்கள் என்ன? இவர் ஜீவசமாதி அடைந்தது எவ்வாறு? என்பன போன்ற செய்திகளை காண்போம்.

கணக்கன்பட்டியில் ஒரு சாதாரண குடும்பத்தில் 1937ம் ஆண்டு பிறந்தவர் காளிமுத்து! பூர்வஜென்ம வினையில் இவர் வளரும் போதே சராசரி மனிதர் போல இல்லாமல் சற்று வித்தியாசம் தெரிந்தது.

"சித்தன் போக்கு சிவன் போக்கு" என்னும் விதத்திலேயே இவரது செயல்கள் இருந்தன. பெற்றோர் இவருக்கு மணம் செய்து வைத்தும் இல்லற ஈடுபாடு இல்லாமலே இருந்தார், காளிமுத்து! இவரது துணைவியார் கருவுற்றிருந்த போது, குழந்தை பெறாமலே மறைந்து விட்டாராம். ஏற்கனவே பித்தனாய் சுற்றித் திரிந்த காளிமுத்து, காலஞானியாய் வலம்வரத் தொடங்கினர்.

இதற்கிடையே 1977ம் ஆண்டு பழனியில் இடும்பன் மலையருகே ஒருவர் இறந்துகிடந்தார். அவர் வேறு யாருமல்ல: சாட்சாத் காளிமுத்துவேதான்! பரிசோதனைக்காக அவரது உடலை பிணவறைக்கும் கொண்டு சென்றார்கள். அங்கு சிறிது நேரத்தில் இவர் உயிருடன் எழுந்து அமர்ந்து யாருக்கும் புரியாத பரிபாஷையில் பேசத் துவங்கினார். இவர் உயர் பிழைத்ததின் சூட்சமம் என்ன? பாம்பாட்டி சித்தரின் சீடரான பிரம்மஸ்ரீ பிரபாகர சித்தரின் 16வது சரிரம் தான் காளிமுத்துவின் சரிரம் என முன்னமேயே மகான்களால் அருளப்பட்டதால் இறந்த காளிமுத்துவின் உடலில் பிரபாகர சித்தரின் ஆன்மா குடியேறியது என்பது சித்த ரகசியமாக அறியப்பட்டது.

ஏற்கெனவே சிவன் போக்காய் இருந்த காளிமுத்துவின் போக்கு சித்தன் போக்காய் மாறத் தொடங்கியது. 1982 முதல் 2001ம் ஆண்டுவரை பழனி இடும்பன்மலை, கலைக்கல்லூரி வளாக வாயில், சிவகிரிப்பட்டி காளியம்மன் கோயில் மற்றும் பல பகுதிகளிலும் 2002ஆம் ஆண்டு முதல் கணக்கம்பட்டி தோட்டத்திலும் பல அற்புதங்கள் நிகழ்த்தி, தன்னை பகவானாய் வெளிப்படுத்தி அருளாசி புரிந்துள்ளார்.



கிடைப்பதை எல்லாம் மூட்டையாய் கட்டி, அதைத் தூக்கிக்கொண்டு பழனி முதல் மதுரை, சிவகாசி, ஈரோடு உட்பட பல ஊருக்கு சென்று வருவார். அந்த மூட்டையோடு தன்னிடம் வருவோர்க்கு அருள்வாக்கு சொல்லி சுற்றிச்சுற்றி வந்ததாலே பக்தர்களால் மூட்டைசுவாமிகள் எனப்பட்டார். அந்த மூட்டைக்குள் இருந்தது என்ன வென்பது இன்றுவரை யாரும் அறியாத ரகசியம்! பாமர மனிதர்களின் பாவமூட்டை தன்னை தான் சுமந்து, அவர்களுக்கு நன்மைபுரிந்தார்.

கணக்கன்பட்டி தோட்டத்திற்கு இவரைக்காணவந்த பக்தர்களுக்கு இவர் அருள்புரிந்த வரலாறு மிகவும் அலாதியானது பிரச்சினை என்று வருவோரை வயல், காடு, சாலை, சாக்கடை என்று பாராது அங்கங்கே அமரவைத்து நாள்கணக்கில் பார்த்தபடி இருப்பார். இவரிடத்தில் உள்ள மூட்டையை உருட்டச் செய்தோ தள்ளச் செய்தோ பார்ப்பார். எளிதாக இவர் தூக்குகின்ற மூட்டையை பக்தர்கள் அசைக்கவே சிரமப் பட்டனர்.

கற்களை அடுக்கச் சொல்வது, ஓர் இடத்தை சுத்தம் செய்யச் சொல்வது இவையெல்லாம் அவரவர் கர்மவினை நீங்க பகவான் மூட்டைசுவாமிகள் செய்த சூட்சுமங்கள்! பாகுபாடு இல்லாமல், வருகின்ற அனைவருக்கும் நல்லாசி வழங்கிய பகவான்..சற்குரு..பழனிச்சாமி சுவாமிகள் 2014ம் ஆண்டு கணக்கன்பட்டியில் ஜீவசமாதி அடைந்தார்.

வாழந்த காலத்தில் வந்தவர்க்கெல்லாம் வளங்களை அருளிய வள்ளல் இன்றும் இந்த ஜீவசமாதியில் உயிர்ப்புடன் இருந்து தன் கருணை உள்ளதால் எல்லோரையும் வாழ்வித்துக் கொண்டிருக்கிறார். அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் ஆயிரக்கணக்கில் தேடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் சற்குருவாய் விளங்கி, பகவானாய் பலன் கொடுத்து அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் கலியுக பகவானாய் கருணைமழை பொழியும் கணக்கன்பட்டி சுவாமிகளின் அருமை, பெருமைகளை உணர இந்த ஜீவசமாதிக்கு சென்று தரிசனம் செய்வோம். **ஓம் சற்குருவே சரணம்!**

~ பன்னீர்செல்வம்

# ஆடி 18ன் சிறப்புகள்

ஆடி 18 அன்று ஆண்களின் வீர விளையாடல்கள் பொங்கிப் பெருக்கெடுத்து ஓடி வரும் காவிரி வெள்ளத்தில் தாவிக்குதித்து, நீந்தி விளையாடுவார்கள். அன்றைய தினத்தில் சிறுவர்கள், சப்பரம் எனும் சிறிய தேர் ஒன்றைக்கயிற்றால் கட்டி, வீதிகளில் உற்சாகமாக இழுத்துத் திரிவார்கள்.



சப்பரம் பற்றிய சிறு விளக்கம்: தேர் போல, சின்னஞ்சிறிய வடிவில் நான்கு சக்கரங்களுடன் இருக்கும்; அழகான சிறு கோபுரமும் இருக்கும்; மலர்கள், காகிதப் பூ வேலைப்பாடுகள் என அலங்கரிக்கப் பட்டிருக்கும்; மென்மையான மரக் குச்சிகளால் இவ்வாறு தயாரிக்கப்பட்ட சப்பரங்கள் மூன்று நாட்களுக்கு முன்னதாகவே, ஆற்றங்கரையில் கொண்டுவந்து சிலர் விற்பார்கள்.

இந்தச் சப்பரங்களை, அதிகாலையில் இருந்தே குழந்தைகள் வீதிகளின் வழியாகச் சத்தம் எழுப்பியபடிக் குதூகலமாக இழுத்துத் திரிவார்கள். இதைத் தவிர, மாலையில் சிறு அகல் விளக்கு ஒன்றை ஏற்றி சப்பரத்தின் உள்ளே நடுவில் வைத்து, இழுத்துச்சென்று குதூகலமாகக் கொண்டாட்டம் போடுவார்கள்.

சப்பரம் ஒன்றை அலங்கரித்து, அதற்குள் பூ முதலான மங்கலப் பொருட்களை வைத்து, ஆற்று வெள்ளத்தில் மிதக்க விடும் பழக்கமும் உண்டு. மங்கலப் பொருட்களுடன் புதுத் துண்டு-வேட்டி-சிறிதளவு பணம் ஆகியவற்றையும் சப்பரத்தில் வைத்து, வெள்ளத்தில் விடுவார்கள். அந்தச் சப்பரம் வெள்ள நீரில் அதன் சுழற்சிக்கு ஏற்றவாறு, வளைந்து சுழன்று ஆடிஆடி மிதந்து வரும் காட்சி மனதை மயக்கும்; கரையிலிருந்து காணும் மக்களெல்லாம் ஆரவாரம் செய்வார்கள்.

சிறுவர்களெல்லாம் ஆற்றங்கரை அருகில் ஆழமில்லாத பகுதியில், தண்ணீரில் கும்மாளம் போட; வாலிபர்களோ கரையில் இருக்கும் மரங்களின் மீது ஏறி, ஆற்று வெள்ளத்தில் குதிப்பார்கள்; தைரியசாலியான ஆண்கள் சிலர் ஆற்று வெள்ளத்தில் நீந்திப்போய், மிதந்தபடி வரும் சப்பரங்களைக் கைப்பற்றி அதில் உள்ள பொருட்களை எடுத்துக்கொண்டு கரைக்குத் திரும்புவார்கள்.

ஆடி 18- விழாவின் நிறைவாக, கரையில் அலங்கரித்துவைக்கப் பட்டிருக்கும் பிள்ளையாரின் முன்னால் அடுக்கிவைக்கப்பட்ட பாத்திரங்களில் இருந்து சர்க்கரையுடன் கலந்த பச்சரிசியை எடுத்து,

வந்திருப்பவர்களுக்கு விநியோகம் செய்வார்கள். சிலர் தாங்கள் கொண்டு வந்திருக்கும் தயிர் சாதம் - தேங்காய் சாதம் முதலான கலவை உணவு வகைகளை, ஆற்றங்கரையிலேயே அமர்ந்து சாப்பிட்டு விட்டுத் திரும்புவார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுகளால் நன்றி மறவாமை, குடும்ப ஒற்றுமை, பல்லோருடனும் பழகல், மகிழ்வான வாழ்வு ஆகியவை மக்களிடையே பரவின.

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# மூலிகை ரகசியம்

## ஆவாரை (Cassia Auriculata)



வளரியல்பு: செடிகள், புதர்ச்செடி.

மாற்றுப்பெயர்: ஆவீரை , ஆவாரம், மேகாரி.

மருத்துவப்பயன் பாகங்கள்: இலை, பூ, காய், பட்டை, பிசின், வேர்.

மருத்துவப்பயன்கள்: முழுத்தாவரமும் துவர்ப்புக் குணமும், குளிர்ச்சித் தன்மையும் கொண்டவை, சிறுநீரகம், சிறு நீர்த்தாரை தொடர்புடைய நோய்களும், ஆன், பெண்குறி எரிச்சலை போக்கும், குறிப்பாக மதுமேக நோய்க்கும், அதனால் பழுதடைந்த சிறுநீரகம் மீண்டும் செயல்பட துவங்கும்.



உடல் வன்மைபெறும், இளைத்த உடலைத்தேற்றும், காமம் பெருக்கும், குளிர்ச்சியுண்டாக்கும், பெண்களுக்கு நாட்பட்ட வெள்ளைப்படுதலை போக்கும், அதிக இரத்தப்போக்கை கட்டுப்படுத்தும். சருமத்தில் ஏற்படும் ஒவ்வாமை, அரிப்புகள் நீங்க இதன் பூவும் சமஅளவு பச்சைப்பயிறு சேர்த்து அரைத்து வெந்நீரில் கலந்து உடலில் தேய்த்து குளிக்க குணமாகும்.

உடல் நலம் பெற ஆவாரை பஞ்சாக சூரணம்: ஆவாரையின் வேர், பட்டை, பூ, காய் இவற்றை சம அளவு எடுத்து காயவைத்து, இடித்து தூளாய்க்கி வைத்துக்கொள்ளவும். 5 to 10 கிராம் அளவு காலை, இரவு இரண்டுவேளை வெந்நீரில் உட்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: மதுமேகம், மிகுதாகம், மிகுந்த பசி, உடல் மெலிவு, பலக்குறைவு, உடல் வன்மை பெறும். முதற் சொன்ன அனைத்து நோய்களும் குணம் கிடைக்கும்.

~ டாக்டர் தங்கமணி

# கால சர்ப்ப யோகமா – தோஷமா?

ஒரு தனி நபர் ஜாதகத்தில் ராகு/கேதுவுக்குள் கிரகங்கள் அடைப்பட்டு போன நிலையில் இருக்கும் ஜாதகத்தில் ஜோதிடர்கள் மத்தியிலேயே குழப்பங்கள் உள்ளது. பலரும் பல்வேறு யுக்திகளை கையாளுகின்றனர். உங்கள் ஜாதகத்தில் காலசர்ப்ப யோகமா- தோஷமா என நீங்களே தெரிந்துக்கொள்ள இக்கட்டுரையை படிப்பதன் மூலம் தெரிந்துக்கொள்வதுடன் பலன்களையும் அறிந்துகொள்ளுங்கள்

**உதாரணம்:** ராகு நிற்கும் ராசியிலிருந்து பின் ராசி முதல் (1) கேது நிற்கும் ராசிக்குள் கிரகங்கள் அனைத்தும் இருந்தால் அது "காலசர்ப்ப யோகமாகும்" ராகு நிற்கும் ராசிக்கு அடுத்த ராசி முதல் கேது நிற்கும் ராசி வரை கிரகங்கள் அனைத்தும் இருந்தால் அது " காலசர்ப்ப தோஷமாகும் " இவ்வாறு எடுத்துக்கொள்வதில் தான் ஜோதிடர்களிடத்தில் மாறுப்பட்ட கருத்துக்கள் நிலவி வருகிறது அவற்றுக்கான விளக்கத்தினை கானலாம்

ராகு - மனித தலையும் பாம்பு உடலும் உடையது

கேது - பாம்பு தலையும் மனித உடலும் உடையது

மனித உருவத்திற்கு விஷ தன்மை கிடையாது

பாம்பு உருவத்திற்கு விஷ தன்மையுள்ளது

ராகு/ கேது எப்போதும் எதிர் கடிகார (anti clock wise) முறையில் இயங்கும் தன்மையாகும்


இவ்வாறு ராகு-கேது பயணிக்கும் நிலையில் அமையப்பெற்ற ஜாதகத்தை பார்த்தோமானால் தெரிந்துவிடும் மேலும் வர்ண சங்கரமான நான்கு வகையான ஸர்ப்ப தோஷங்களும் தேவம்சமான அஷ்ட நாகதோஷங்களும் முறையே, அதாவது பிராமண வர்ணத்தை சேர்ந்த அனந்தன், காளியன் ஆகிய இரு நாகங்கள் வைஸ்வா நர பீஜத்தில் நின்றும் க்ஷத்திரிய வர்ணத்தை சேர்ந்த வாசுகி,சங்க பாலன் ஆகிய நாகங்கள் இந்திர பீஜத்தில் நின்றும் வைஸ்ய வர்ணத்தை சேர்ந்த தக்ஷ்கன் மஹாபத்மன் ஆகிய இரு நாகங்கள் வாயு பீஜத்தில் நின்றும் சூத்திர வர்ணத்தை சேர்ந்த பத்மன், கார்கோடகன் ஆகிய இரு நாகங்கள் அருண பீஜத்தில் நின்றும் அதன் பாதிப்புகளை கொடுத்துக் கொண்டு இருக்கின்றது ஜாதகத்தில் அவைகள் எவ்வாறு பாதிப்புகளை கொடுக்கும் என்றும் அவைகளிருந்து மீள்வதற்கான வழிமுறைகளை ஒவ்வொன்றாக பார்க்கலாம்

ஒருவரின் ஜாதகம் காலசர்ப்பதோஷம் உள்ளதாக இருந்தால் அவரின் முன்னோர்களின் சொத்துகளாகட்டும், அவர்களின் பாரம்பரிய பெருமைகளாகட்டும் அவற்றினை பேணி காக்க முடியாமல் சிரமப்படும் மனிதராக வாழவேண்டிய சூழ்நிலை உருவாகும் (அ) தன் இஷ்டப்படி வாழ்வார் கட்டுபாடற்ற வாழ்வு என்பது ஒரு மனிதனைசீர்ப்படுத்தாது இவ்வாறு காலசர்ப்பதோஷத்தின் பாதிப்பில் காணப்படும் இவர்களை சிறு வயது முதல் ஆன்மிக நெறிகளை எடுத்து கூறியும் பொதுவான நன்

நடத்தைகளை கற்பித்து வளர்த்தல் அவசியமாகிறது அத்துடன் ரிஷி பெருமக்கள் கூறியுள்ள தகுந்த பரிகாரங்களை ஜோதிடர்களின் ஆலோசனையின் அடிப்படையில் தகுந்த காலங்களில் பரிகாரம் செய்து கொள்வதின் மூலம் நன்மைகள் நடக்கும். காலசர்ப்ப யோகம் அமைய பெற்ற ஜாதகரும் 36 வயது வரை தோஷ சாந்தி பரிகாரங்களை செய்து கொண்டு வரும் பட்சத்தில் 36 வயதுக்கு பின் யோகத்தை அனுபவிக்கும் அமைப்பு உண்டாகும்

வேத ஜோதிடத்தில் கூறப்பட்டள்ள சர்ப்ப கிரகங்கள்மூலம் ஒவ்வொரு ஜாதகருக்கும் ஏற்படும் இன்னல்கள், துன்பங்கள், தடைகள் வேதனைகள், ராகு/ கேது எந்த எந்த ராசிகளில் இருந்தால் என்னனென்ன தோஷங்கள் என்பன பற்றியும் அவற்றிற்கு ரிஷிகள் கூறியுள்ள தீர்வுகளையும் வழிமுறைகளையும் தொடர்ந்து காணலாம்.

~ ஜோதிடர் M மீனாட்சி சுந்தரம்.






# திருவண்ணாமலையின் சிறப்புகள்

திருவண்ணாமலை ஆலயம் 24ஏக்கர் பரப்பளவு கொண்டது. இவ்வாலயத்தில் 9 கோபுரங்கள் உள்ளது. வடக்கு கோபுரம் அம்மணி அம்மன் என்ற பெண் சிவனடியாரின் சீரிய முயற்சியால் கட்டப்பட்டது. எனவே இதற்கு அம்மணி அம்மன் கோபுரம் என்ற பெயர் வழக்கு வருகிறது. தெற்கில் உள்ள கோபுரம் திருமஞ்சன கோபுரம் என பெயர் பெற்றுள்ளது.

இவ்வாலயத்தில் முருகப்பெருமான், அருணகிரிநாதருக்கு காட்சி கொடுத்தது, கம்பத்து இளையனார்சன்னதி! அருணகிரிநாதருக்கு ஞானம் கொடுத்தது, கிளி கோபுரத்தின் அடியில்! அது தியான மண்டபமாகத் திகழ்கிறது. இங்குள்ள விநாயகர், உடல்முழுவதும் செந்தூரப் பூச்சோடு மாப்பிள்ளை விநாயகர் என்ற பெயரோடு வீற்றிருக்கிறார்.

அணைத்து சிவாலயங்களிலும் இரவு பள்ளியறை பூஜைக்கு அம்மன் சன்னதிக்கு சுவாமி செல்வது வழக்கம். ஆனால்! திருவண்ணாமலை ஆலயத்தில் சுவாமி சன்னதிக்கு அம்மன் செல்வார். காரணம், மலையாய் வீற்றிருக்கும் மகாதேவன் இடம் பெயர மாட்டார். எனவே, சுவாமியைத் தேடி அம்பாள் வருவதாக ஐதீகம்!

~ பன்னீர்செல்வம்



# கந்தசஷ்டி கவசத்தில் வேலின் மகிமை



நமது தெய்வங்கள் தாங்கிநிற்கும் ஆயுதங்களிலேயே அழகும் அர்த்தமும் நிறைந்த ஒரே ஆயுதம் முருகப்பெருமானின் கையில் இருக்கும் வேல்!

வேல், ஆயுதம் மட்டுமல்ல; ஆழ்ந்த ஞானத்தின் அடையாளம்! முருகனை வணங்குவோர்க்கு அவன் ஞானத்தை அருள்வான். அந்த ஞானத்தின் வடிவமே வேல்! அதோடு, அழகு மிளிரும் ஒரு ஆன்மிக சின்னம்!

முருகவேள் என்னும் முத்தமிழ் தெய்வமான முருகப்பெருமான் தன் அடியவர்களைக் காக்க, வேலின் ஆற்றலையே விரைந்து செலுத்தினான். அதனால் தான் கந்தசஷ்டி கவசம் பாடிய தேவராயன், மனித அங்கங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வேல் காக்கும் எனக் குறிப்பிட்டு பற்பல அங்கங்களுக்கும் பல வேல்களை பரிணாமம் எடுக்கச் செய்தார். கந்தசஷ்டி கவசத்தில் மிளிரும் அத்தனை வேலும் அணிவகுத்து நின்று, கவசத்தைப் பாடுவோரின் நோய்களை அகற்றி, உடலைக் காப்பதோடு, குடும்பத்தை முடக்குப்போடும் ஏவல், பில்லி சூனியம், தடைகள் போன்றவற்றையும் தூளாக்கும் ஆற்றல் கொண்டதாய் விளங்குகின்றது.



"கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனிய வேல் காக்க!
மார்பை இரத்ன வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க..."



என நீள்கின்ற இப்பாடலில் ஆண், பெண் என இரு பாலருக்குமான அங்க அவயங்கள் ஒவ்வொன்றையும் எம்பெருமானின் மேல்வரிசை காத்திட வேண்டும் என்னும் வேண்டுதலே மேலோங்கி நிற்பதைக் காணலாம். உடல் உறுப்புகளின் பெயர்கள் எல்லாமே இப்பாடலில் இடம் பெறுகின்றன. பொதுவாக மார்பைக் குறிப்பிட்ட தேவராயர், பெண்ணின் மார்புக்கும் காப்பு வேண்டி, சேரிள முலைமார்... என்ற வார்த்தையைப் பயன்படுத்தி உள்ளார்.

"வேலுண்டு வினையில்லை" என்ற நம்பிக்கையோடு வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என கோஷமிடும் பக்தர்கள் எக்குறையுமின்றி நிறைவான வாழ்வினைப் பெறவேண்டும்என்பதே கந்தசஷ்டி கவசத்தின் நோக்கும்! தயை கூர்ந்து இதனை யாரும் கொச்சைப்படுத்த வேணடாம்! வேல் வேல் வெற்றிவேல்!

~ பன்னீர்செல்வம்

# கிருஷ்ணாவதாரம்

மகாவிஷ்ணுவின் மகிமை எப்போதும் நிறைந்திருக்கும் மதுரா நகரில், அலங்காரமான தேர் ஒன்றைக் கொடியவனான கம்சன் ஓட்டிக்கொண்டிருந்தான். தேரில் புதுமணத்தம்பதியாக வசுதேவரும் தேவகியும் அமர்ந்திருந்தனர். பெருவாரியான மக்கள் மகிழ்ச்சியாக அந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அனைவரது மகிழ்ச்சியையும் குறிப்பாகக் கம்சனின் நிம்மதியையும் குலைக்கும் விதமாக ஓர் அசரீரி கேட்டது.



"மூடனே! கம்சா! நீ இப்போது அழைத்துச்செல்லும் இந்தத்தேவகியின் எட்டாவது கர்பம் உன்னைக்கொல்லப் போகிறது" என்றது அசரீரி.

கம்சனுக்கு மரண பயம் வந்து விட்டது.நல்லவன் தனக்கு வரும் நல்லதை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வான். கெட்டவனோ தனக்கு உண்டாகும் ஆபத்தை அடுத்தவர்களிடம் தள்ளி விடுவான். தீயவனான கம்சனும் இதையே தான் செய்தான். வாளைஉருவி மணக்கோலத்தில் இருந்த தேவகியின் கூந்தலைப் பிடித்து அவளைக்கொல்ல முயன்றான்.

அவனைத்தடுத்த வசுதேவர், "கம்சா! உனக்கு தேவகியிடமிருந்து பயமில்லையே! அவளுடைய எட்டாவது குழந்தையால் தானே? எட்டாவது குழந்தை என்ன? எட்டு குழந்தைகளையும் உன்னிடம் தந்து விடுகிறேன்" என்றார். கம்சனும் மனமிரங்கி வசுதேவரையும் தேவகியையும் வழியனுப்பி வைத்தான்.

வசுதேவருக்கு முதல் குழந்தை பிறந்தது. தன் வாக்கைக்காப்பதற்காக, அவர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் கம்சனிடம் கொடுத்தார். கம்சன் தீயவனாக இருந்தாலும் அவன் மனதிலும் ஏதோ இரக்கம் சுரந்ததுளூ "எட்டாவது குழந்தையால் தானே எனக்கு மரணம்? இது முதல் குழந்தை தானே" என்று கூறிக் குழந்தையை வசுதேவரிடமே தந்து அனுப்பி விட்டான்.

அந்த நேரத்தில் கம்சனைத் தேடி வந்தார் நாரதர்; "கம்சா! தேவகி, வசுதேவர், கோகுலத்தில் உள்ள நந்தகோபர், யசோதை முதலான கோபர்கள் கோபிகைகள் என அனைவரும் தேவர்களின் அம்சங்கள். கம்சனான நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் அரக்கர்கள்.உங்கள் அனைவரையும் வதம் செய்வதற்காகவே, பகவான் வசுதேவரின் குழந்தையாக அவதரிக்கப் போகிறார். எச்சரிக்கையாக இரு!" என்று சொல்லிவிட்டுப்போய் விட்டார். காரணம்? மரீசி முனிவரின் பிள்ளகளான ஆறு பேர்களும்

சாபத்தின் காரணமாகக் கம்சனால் கொல்லப்பட வேண்டியவர்கள். அதற்காகத்தான் நாரதர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

விவமறிந்த கம்சன் உடனே வசுதேவரையும் தேவகியையும் சிறையில் அடைத்தான். முதல் குழந்தை உட்பட ஆறு குழந்தைகள் கொல்லப்பட்டன. தேவகி ஏழாவது கருவைச் சுமந்த நேரம். பகவான் யோகமாயையை அழைத்து, "கோகுலத்தில் வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோகிணி இருக்கிறாள். தேவகி வயிற்றிலுள்ள கர்பத்தை எடுத்து, அதை அப்படியே ரோகிணியின் வயிற்றில் வைத்து விடு! அதன்பின் நான் பூரண அம்சமாக தேவகியிடம் அவதரிப்பேன். நீ நந்தன் மனைவி யசோதையிடம் அவதாரம் செய்! உன்னை துர்கா, பத்ரகாளி, விஜயா, சண்டிகா, கிருஷ்ணா, மாதவி, கன்னிகா, மாயா, நாராயணி, ஈசனா, சாரதா, அம்பிகா எனும் திருநாமங்களில் வழிபடுவார்கள். அவர்களுக்கு சர்வ மங்கலங்களையும் அருள்!" என்றார்.

அதன்படியே யோகமாயை செய்தாள். பகவானின் சொற்படி தேவகியின் கர்பத்திலிருந்து ரோகிணியின் கர்பத்திற்கு மாற்றப்பட்ட அக்குழந்தை தான் பலராமன். தேவகியின் வயிற்றில் எட்டாவது கர்ப்பத்தில் பகவான் குழந்தையாக வடிவம் கொண்டார். தங்களுக்காகத் தேவகியின் கர்ப்பத்தில் வாசம் செய்யும் பகவானைத் தரிசிக்க, தேவர்கள் அனைவரும் வசுதேவரும் தேவகியும் இருந்த சிறைச்சாலைக்கு வந்து பகவானைத் துதித்தார்கள்.



வாருங்கள்! இதோகண்ணன்! அவதரிக்கும் வேளை நெருங்கி விட்டது. மனமாறத் தரிசிக்கலாம்.

மங்கல வடிவான பகவான் அவதரிக்கும் நள்ளிரவு நேரம். சுபக்கிரகங்கள் எல்வாம் தாமாக ஒன்றுகூடின. அஷ்டமி திதியும் ரோகிணி நட்சத்திரமும் இணைந்த வேளை.
திசைகள் எல்லாம் மின்னின. துந்துபி முழங்கியது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். கம்சனின் சிறைச்சாலையில் ஸ்ரீகிருஷ்ணன் எனும் அற்புதம் உதயமானது - என்கிறார் சுகாசாரியார்.

சிறிய வடிவம், தாமரைக்கண்கள், நான்கு திருக்கரங்கள், அவற்றில் சங்கு சக்கரம் கதாயுதம் தாமரை, திருமார்பில் ஸ்ரீ வத்சம், கழுத்தில் கௌஸ்துப மணி, இடுப்பில் பீதாம்பர ஆடை, தலையில் வைடூரியங்கள் இழைத்த கிரீடம், குண்டலம் தோள்வளை முதலான ஆபரணங்கள், சுருண்ட கறுத்த தலைமுடி, நீர் குடித்த மேகம் போன்ற திருமேனி -ஆகியவற்றுடன் கண்ணன் அவதரித்தார்.

அவதரித்த தெய்விகக்குழந்தையை வசுதேவரும் தேவகியும் துதித்தார்கள். நாமும் துதிப்போம்! துயர் தீர்க்க வேண்டுவோம்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# நவ கிரகங்கள் குறிப்பிடும் நோய்கள்

| | |
|---|---|
| சுக்கிரன் | உடலில் உள்ள கொழுப்பு, மூலை<br>முகம், பாலுறுப்புகள், சீறுநீர், விந்து, இடது காது, பெண்ணின் கருப்பை |
| சனி | முழங்கால், கால் நரம்பு மண்டலம் |
| இராகு | பாதங்கள் மற்றும் சிறு நரம்புகள் |
| கேது | வயிறு, பாதங்கள் |

சூரியன் - உத்ர வியாதி, எலும்பு தேய்வு, நாற்கால் மிருகங்கள் உபத்திரம், கண் நோய்கள், காய்ச்சல், இதய நோய், படபடப்பு தோல் நோய்கள், எலும்பு நோய்கள், எலும்பு முறிதல், பித்தம் தொடர்பானவைகள், தலை வழுக்கை விழுதல், சர்ப்ப கோபம், சிவகண உபாதைகளால் நோய்கள் உண்டாகும்.

சந்திரன் - உரக்கம் அதிகமாகுதல், கபத்தில் தொல்லை, கொப்பளம், நுரையீரல் நோய், இதய நோய், வயிற்றுப்போக்கு வாந்தி, இரத்த நோய், உடலில் கட்டிகள், புற்று நோய், தூக்கமின்மை, மனநோய், காச நோய், கருப்பை தொடர்பான நோய்கள், மாதவிடாய்க் கோளாறுகள், கொம்புல்ல விலங்குகளால் குத்தப்படுதல், காம வியாதிகள், துர்க்கா பகவதியின் கோபம், தர்ம தெய்வ கோபம், சர்ப்பகோபம், பிசாசு உபத்திரம் இவைகளாலும் நோய் உண்டாகலாம். தண்ணீர் தாகத்தால் குஷ்டம், நீர்கட்டி, மஜ்ஜை கெடுதல், சொரி சிரங்கு.

செவ்வாய் - இரத்தம் தொடர்பான நோய்கள், தாகவிடாய் மார்பகத்தில் உண்டாகும் நோய்கள், உயிர் இரத்த அழுத்தம், புற்று நோய், வலிப்பு நோய், பித்தம் தொடர்பான நோய்கள், சூட்டு புண்கள், திருடர்கள், புத்திரனுடைய உறவினர்கள், காந்தர்வ உபாதை, கழுத்துக்கு மேல் வரும் ரோகங்களும் உண்டாகும்.

புதன் - சித்த பிரம்மை, கெட்ட வார்த்தை பேசுதல், கண் நோய் அனைத்து விதமான மன நோய்கள் நரம்பு சம்பந்தமான நோய்கள், ஜன்னி காய்ச்சல், தோல் நோய், கெட்ட கனவுகளால் உளைச்சல், காந்தர்வ உபாதை, பட்சிகளால் ஏற்படும் பீடை.

குரு - புத்தி  சுவாதீனமின்மை, காது சம்பந்தமான நோய்கள், மண்ணீரல், ஈரல், சிறு நீரகம், காது போன்றவை மஞ்சல் காமாலை, கட்டிகள், சிறுநீரில் உப்பு, மூலம்  நீரிழிவு (கோயில்களில் உள்ள புராதன பொருட்களை எடுத்து மஹா பிராமணர்களால் சாபம் கொடுத்ததால் வரும் வியாதிகள்) கிரக

வித்யாதரர் பாதிப்பினால் உண்டாகும் வியாதிகள், விஷ்ணுவின் கோபம்.

சுக்கிரன் - முக ரோகம், காமத்தால் வரும் ரோகங்கள், நீர்க்கட்டி, நீரிழிவு, முகம் தொடர்பான நோய்கள், கண் நோய், சிறு நீரக நோய்கள், இரத்த சோகை, பித்தம், வெள்ளைப்படுதல் மற்றும் பால்வினை நோய்கள்.

சனி - வாத கபத்தினால் உண்டாகும் ரோகங்கள், சித்த பிரம்மை, மூட்டு வலி, பாரிச வாதம் காலில் ஏற்படும் நோய்கள் வயிற்று நோய், மண நோய், தசை வலி, வழுக்கை, நரம்பு தொடர்பான நோய்கள், கால் வலி, வயிறு வலி, செவிட்டு தன்மை, மரம், கல், விழுதலால் ஏற்படும் நோய், பிசாசுகளால் ஏற்படும் வியாதிகள்.

இராகு - உஷ்ணம், குஷ்டம், விசம், ஒரே நேரத்தில் பல வியாதி, புற்று நோய், தோல் நோய் அம்மை, தொழு நோய், ஆஸ்துமா, மண்ணீரல், வீங்கிப்போதல், புழுக்களால் வரும் நோய்கள், அலர்ஜி தொடர்பான நோய்கள், நரம்பு தொடர்பான நோய்கள், செய்வினையால் ஏற்பட்ட தோஷம்.

கேது - வயிற்று நோய், மன நோய், கட்டிகள், குறைந்த இரத்த அழுத்தம், புழுக்களால் வரும் நோய், ஆந்தரான்ஸ் போன்ற கொடிய கிருமிகளால் உண்டாகும் நோய்கள்.

ஆருட அதிபதி ஸ்திர ராசி அல்லது ஸ்திர நவாம்சம் பெற்றாலும். 6, 12ம் இடங்களில் இருந்தாலும், பலம் குறைந்து எங்கு இருந்தாலும் சத்ரு இராசி, சத்ருவோடு இணைந்தாலும் அஸ்தங்கம் அடைந்தாலும் ரோகம் உண்டுடென்று கூற வேண்டும். தீய பாவங்களில் நிற்க்கும் கிரகங்களைக் கொண்டும் ரோகத்தை கூறலாம்.



~ கணியன் A N ராஜசேகரன்

# சர்வ கர்யா சித்தி யந்திரம்

சர்வ கர்யா சித்தி யந்திரம் இந்து ஜோதிடம் மற்றும் நம்பிக்கையில் மிகவும் பயனுள்ள யந்திரமாகும். சர்வ கர்யா சித்தி யந்திரம் ஒரு குறிக்கோளின் ஆரம்பகால உணர்தலுக்காக வைக்கப்படுகிறது. யந்திரம் ஒரு நபரின் நல்வாழ்வையும் வாழ்க்கையில் வெற்றியையும் உறுதி செய்கிறது. ஆசை நிறைவேற்றத்திற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. சர்வ கர்யா சித்தி யந்திரம் அனைத்து முயற்சிகளிலும் வெற்றியை அடைய ஒரு சக்திவாய்ந்த யந்திரம். சர்வ கர்யா சித்தி யந்திரம் ஒரு பயனுள்ள மற்றும் சக்திவாய்ந்த யந்திரம். சர்வ கர்யா சித்தி யந்திரம் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் தனிநபரின் நல்வாழ்வையும் வெற்றிகளையும் உறுதி செய்கிறது. வெளிநாட்டு நாடுகளுக்கான பயணம், அரசியல், திருமண வாழ்க்கை, வேலைவாய்ப்பு போன்ற எந்தவொரு வேலையையும் அல்லது பணியையும் வெற்றிகரமாக முடிக்க இந்த யந்திரம் பயனுள்ளதாக இருக்கும். சர்வ கர்யா சித்தி யந்திரம் இந்து ஜோதிடம் மற்றும் நம்பிக்கையில் மிகவும் பயனுள்ள யந்திரமாகும். பயனரின் அனைத்து விருப்பங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்ற உதவும் சக்திவாய்ந்த மந்திரத்தால் இந்த இயந்திரம் உற்சாகப்படுத்தப்படுகிறது. சர்வ கர்யா சித்தி யந்திரத்தை நல்லதொரு ஞாயிற்றுக்கிழமை வைத்து பூஜிப்பது நல்லது. தினசரி அடிப்படையில் மந்திரம் சொல்வது சிறந்தது. காலையில் குளிக்கவும்ளூ முடிந்தால் வடகிழக்கு திசையை பார்த்து அமர்ந்து வெள்ளை பூக்களால் பூஜிப்பது நன்மை தரும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், யந்திரத்திற்கு வாசனை திரவிய பூக்களை பூஜிப்பது சிறந்தது. சர்வ கர்யா சித்தி  யந்திரத்தை தவறாமல் வழிபடுவது நல்லது, மேலும் நல்ல பலனைத் தரும்.

சர்வ கர்யா சித்தி யந்திரத்தின் மந்திரம்: ஓம் ஹ்ரிம் ஸ்ரீம் கிளிம் நம



~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# ஆகஸ்ட் மாத ராசிபலன்கள் – 2020



## மேஷம்

- வேலையில் கவனம் தேவை
- குடும்பத்தில் பெண்களால் மகிழ்ச்சி உண்டாகும்.
- சில நேரங்களில் சிறுது மனக்குழப்பங்கள் ஏற்படலாம்.
- தொழில் துறையில் மிகச்சிறப்பாக செயல்படுவீர்கள்
- பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகமாகும்
- ஆன்மீக பயணங்கள் செல்ல நேரிடும்.
- ஜீவனம் நன்றாக இருக்கும்
- செயல்களில், சில பிரச்சினைகளாலும், சூழ்நிலைகளாலும் தன்னம்பிக்கையும், தைரியமும் குறைந்து காணப்படும்.
- சகோதரர்களிடம் கவனமாக இருக்கவேண்டும்
- பணியிடத்தில் உங்கள் மதிப்பை நிரூபிக்க ஒரு நல்ல வாய்ப்பு உங்களைத் தேடி வரும்.
- நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வந்து விலகலாம்
- உங்கள் படிப்பு சீரான போக்கில் இருக்கும்
- படிப்பதை சிலர் மறந்து விடுவீர்கள். ஆசிரியரின் ஆலோசனைகளை பெற்று நடப்பது நல்லது.
- ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு உணவு அளித்தல். ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி செய்தல்.



# ரிஷபம்

- உங்கள் புகழ் மற்றும் கௌரவம் சிறப்பாக இருக்கும்.
- மற்றவர்கள் உங்கள் செயல்களினால், உங்களுக்கு எதிரிகளாவர்கள்
- தன வரவு சுமாராக இருக்கும்
- குடும்பத்தில் மனநிம்மதி இன்மையும் ஏற்படும்
- உடல்நல பாதிப்புகள் வந்து நீங்கும்
- குழந்தைகள் நன்றாக படிப்பதால், அதனால் ஆனந்தம் அடைவீர்கள்.
- வெளியூர் பயணங்களால் செலவு அதிகமாக செய்வீர்கள்.
- செய்யும் தொழிலில் லாபம் உண்டாகும்
- காரியதடங்கல்கள் ஏற்பட்டு விலகும்
- திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களுக்கு இடமுண்டு
- தந்தை வழி சொத்து பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.
- ஆன்மீக பயணங்கள் செல்ல நேரிடும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ரங்கநாதர் மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.




Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: 95004 95008



# மிதுனம்

- மாதம் எந்த ஒரு தொழிலிலும், செயலிலும் தெளிவு இல்லாமல் காணப்படுவீர்கள்
- உங்கள் உடல் நிலையிலும், மன நிலையிலும் அக்கறை தேவை.
- பலவிதமான குழப்பங்கள் ஏற்ப்படும்
- உடல் நலனில்கவனம் தேவைப்படலாம்.
- பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மற்றவர்களிடம் மனகசப்பு ஏற்படலாம்.
- குழந்தைகளினால் செலவுகள் அதிகரிக்கும்
- குழந்தைகள் உடல் நிலை பாதிப்பு ஏற்படுமென்பதால் கவனம் தேவை
- எதிரிகளால் தொல்லை ஏற்படும்
- உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களின் தவறான அபிப்ராயங்கள், உங்கள் முயற்சியால் விலகும்
- காதல் வாழ்க்கை பொறுத்தவரை இந்த மாதம் சுமாரான மாதமாகும், இருந்தாலும் புதிய தொடர்புகள் ஏற்படும்
- படிப்பதற்கும், சிறந்தகல்வி அனுபவத்தைப் பெறுவதற்கும் இதுசரியான நேரம்.

## பரிகாரம்:

- ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர் மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்






# கடகம்

- நீங்கள் மேற்கொள்ளும் எல்லா செயல்களிலும் சாதாரண பலன்களே கிட்டும்
- கடுமையான வேலைப்பளுவால் உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் இருக்கலாம்
- மருத்துவ செலவுகளும் ஏற்படலாம்
- பொருளாதாரம் சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும்.
- பல்வேறு பணிகள் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய சூழ்நிலையில் கவனமாக நடந்து கொள்ளவும்.
- தொழில்சார்ந்த பணிகளில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்
- தேவையான நேரங்களில் உங்களுடைய கூர்மையான அறிவாற்றல் உங்களுக்கு கை கொடுக்கும்
- குடும்ப வாழ்வில் கருத்து வேறுபாடுகள் எழுவதற்கு வாய்ப்பு உண்டு.
- காதலர்களுக்கு இந்த மாதம் அனுகூலமான காலமாகும்.
- காதல் விவகாரங்களில் அன்பும், பாசமும் நிறைந்து காணப்படும்.
- ஆரோக்கியம் கவனமாக இருக்கவும
- மாணவர்களுக்கு நல்ல மாதமாக இருக்கும்
- ஊக்கமும், விரைவில் கற்றுக் கொள்ளும் திறனும் உங்களிடம் இருக்கும்.
- இந்த நல்ல குணங்கள்,சிறந்த கல்விபெற உங்களுக்கு உதவும்.

## பரிகாரம்:

- திருப்பதி பாலாஜி மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்



# சிம்மம்

- சிறப்பான மாதம்
- தொழில் ரீதியாக, நன்மை பயக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.
- சூழ்நிலைகள், சில சமயங்களில், உங்கள் பொறுமையை சோதிக்கலாம்.
- எளிதில் நம்பிக்கை இழக்காதீர்கள்
- உடல் ஆரோக்யத்தில் கவனம் செலுத்தவும்
- உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.
- தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை
- பதவியில் முன்னேற்றம் ஏற்படும்.
- கடினமாக உழைத்து, அதிக உற்பத்தித் திறனை அடையும் காலம் இது.
- குடும்ப விஷயங்களில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.
- திருமணமாகதவர்கள் புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வர திருமணம் நடக்கும்
- அன்பானவர்களுடன் நேரத்தைச் செலவிட்டு மகிழ்வீர்கள்
- கபம் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்பட்டு விலகும்
- செரிமான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள்.
- நண்பர்களுடன் நல்லுறவை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- உங்கள் படிப்பு சீரான போக்கில் இருக்கும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் ஸ்ரீ ஆதிசேஷன் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

ஏழை குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவ செலவிற்கு உதவுதல், அனாதை ஆசிரமங்களில் உள்ள குழந்தைகளுக்கு அன்னதானம் அளித்து உதவி செய்தல்.



# கன்னி

- வாகனங்கள் வாங்க வாய்ப்பு உண்டாகும்
- வேலையில் இடமாற்றங்கள் ஏற்படும்
- செய்யும் தொழிலில் லாபங்கள் தடைபடும்
- குடும்பத்துடன்  வெளியூர் பயணங்கள் ஏற்படும்.
- மனைவியின் உடல் நிலையில் கவனம் தேவை
- உடல் நலனில் முன்னேற்றம்  காணப்படும்
- சிறுது கஷ்டங்கள் இடையிடையே வந்து போகும்.
- தந்தையின் உடல் நலம் நலமாக இருக்கும். தாயின் உடல் நிலையில் கவனம் தேவை.
- பணவரவு நன்றாக இருக்கும்
- சகோதர வழியில் பலன்களை அடைவீர்கள்
- காதல் திருமணத்தில் முடிய வாய்ப்பு உண்டாகும்.
- கணவன் மனைவிக்குள் புரிந்துணர்வு அதிகரிக்கும்.
- காதலர்களுக்குள் மனகசப்பு ஏற்படலாம்
- உங்கள் வெற்றி மற்றும் சந்தோஷம் உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தரும்
- மன அழுத்தம் இல்லாத அமைதியான வாழ்க்கையை அனுபவிப்பீர்கள்
- படிப்பதற்கும்,சிறந்த கல்வி அனுபவத்தைப் பெறுவதற்கும் இது சிறப்பான மாதமாகும்.

## பரிகாரம்:

- ஸ்ரீமன் நாராயணன் மற்றும் ஸ்ரீ கணபதி வழிபாடு பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

ஏழை குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவ உதவி செய்தல், ஆதரவற்றோருக்கு அன்னதானம் அளித்தல்



# துலாம்

- தன வரவு நன்றாக இருக்கும்
- தொழில் துறையில் அதிகமான உழைப்பும், கடுமையான முயற்சியுடனும் உங்கள் தனித்திறனை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள்.
- வேலை செய்யும் இடத்தில் உயர்பதவிகள் வர வாய்ப்பு அதிகம்.
- கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்காது
- திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.
- தகப்பனாரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும்.
- தாய் வழியில் சொத்துக்கள் வந்தடையும்
- காதல் விவகாரங்களில் இந்த மாதம் கவனமாக இருக்கவேண்டும்
- பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு ஏற்படும்.
- ஆரோக்கியம் சுமாராக இருக்கும்
- நீங்கள் நடைமுறையில் பாடங்களை நன்கு தெரிந்து கொள்வீர்கள்
- கடும் முயற்சிக்குப் பின்னரே பலன் கிடைக்கும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன் மற்றும் ஸ்ரீ துர்க்கை வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- வீட்டுக்கு அருகில் உள்ள கோவிலில் ஏழை, சந்நியாசி மற்றும் பிராமணர்களுக்கு தானம் செய்தல். சித்தர் சமாதி வழிபாடு



# விருச்சிகம்

- பலன்கள் உங்களுக்கு அனுகூலமாக அமைய ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் கடினமாக முயற்சி செய்ய வேண்டும்.
- உங்கள் தனிப்பட்ட வாழ்விலும் தொழிலிலும் சவால்கள் நிறைந்து காணப்படும்
- வேலையில் உங்கள் கவனக்குறைவு காரணமாக நீங்கள் சில வாய்ப்புகளை இழக்க நேரிடலாம்
- குடும்பத்தில் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம்
- எல்லா விஷயங்களிலும் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும்
- சிலருக்கு திருமணம் நடக்க வாய்ப்புள்ளது.
- மனைவி மூலம் செலவுகள் ஏற்படலாம்
- செய்தொழிலில் லாபங்கள் முடக்கம் ஏற்படலாம்
- நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்
- உங்கள் செயல்களால் பெற்றோர்கள் பெருமிதம் அடைவார்கள்

## பரிகாரம்:

- ஸ்ரீ முருகப்பெருமான் மற்றும் ஸ்ரீ காலபைரவர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- செவ்வாய், குரு, சனி, ராகு, கேதுவுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.




AMRTA KARUNA SYRUP

Control Infection Caused due to Bacteria or Virus

Call: 95004 95008

CLINICALLY PROVEN



# தனுசு

- வேலையில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.
- சக ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.
- அன்றாட நடவடிக்கைகளில் உங்களுடைய தீவிரமான ஈடுபாடு, எல்லோரையும் ஈர்த்து உங்களுடன் இணைந்து செயலாற்ற வைக்கும்
- தன வரவு சிறுது மந்தமாக காணப்படும்.
- இளைய சகோதரர்களினால் பிரச்சனைகள் வரலாம்.
- காதல் வாழ்க்கையில் கவனம் தேவை
- உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியை மேம்படுத்திக் கொள்ள இது ஒரு மிகச் சரியான நேரம்.
- சிலருக்கு பணியிடத்தில் வெளியூர்பயணம்ஏற்படவாய்ப்புஉள்ளது.
- நாகரீகமானபொருட்களில்அதிகஆர்வம்இருக்கும்.
- ஆரோக்கியம்சாதாரணமாகஇருக்கும்.
- மாணவர்கள் வெளியே செல்வதில் நேரத்தைச் செலவிடுவதற்கு பதிலாகக் கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டு படிப்பது நல்லது

## பரிகாரம்:

- சிவபெருமான் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

குரு, சனி, ராகு, கேதுவுக்கு ஹோமமம் மற்றும் பூஜை செய்து வழிபடுதல்.



# மகரம்

- சிலருக்கு தெய்வீக வெளியூர் பயணங்கள் ஏற்படலாம்.
- மனதில் ஏதோ ஒரு கவலை இருந்து கொண்டே இருக்கும்
- அடிக்கடி தலைவலியும், மன குழப்பங்களும் ஏற்படலாம்
- குடும்பத்தில் சுமூகமான உறவு  ஏற்படும்
- இளைய சகோதரனால் மனகசப்பு ஏற்படலாம்.
- உடல்நிலையில் சிறுபாதிப்புகள் உண்டாகும்.
- தெய்வீகத்தில் நாட்டம் அதிகமாக இருக்கும்
- ஆன்மீக பயணங்கள் செல்ல நேரிடும்.
- தொழில் துறையில் சிறுது கவனம் தேவை, இருந்தாலும் லாபம் உண்டாகும்
- தாயின் உடல்நிலையில் கவனம் தேவை
- தாய் மற்றும் உறவினர்களுடன் சிறு கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்
- காதல் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்
- கல்வியைப் கவனம் திசை திரும்ப வாய்ப்பு ஏற்படும். இது கல்வி முன்னேற்றத்தைக் குறைக்கும்.
- படிப்பில் உங்கள் கடின முயற்சி காரணமாக நல்ல நிலை அடைவீர்கள்

## பரிகாரம்:

• ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

ஏழை, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுதல். பறவைகளுக்கு உணவு அளித்தல்.



# கும்பம்

- தொழில் துறையில் கவனம் தேவை
- தொலை தூரங்களிலிருந்து உங்களுக்கு வரவேற்பு அழைப்புகள் வரும்
- நிதி மற்றும் தொழில்துறை தொடர்பான நடவடிக்கைகள் நன்றாக இருக்கும்.
- பணியாளர்களுக்கு சுமாரான காலமாகும்.
- திருமணமானவர்களுக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும்
- யாத்திரை செல்ல நேரிடலாம்
- வாகன யோகம் உண்டு
- காதல் திருமணத்தில் முடியும். இருந்தாலும் சின்ன சின்ன தடைகள் ஏற்படலாம்
- செலவுகள் காரணமாக பாதிப்பு ஏற்படும்.பணம் போட்டு புதிய தொழில்கள் தொடங்குவீர்கள்
- கண்டிப்பான உணவு கட்டுப்பாட்டை பராமரிக்க வேண்டும்
- மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் இருக்கும்
- நண்பர்களுடன் நல்லுறவை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்

## பரிகாரம்:

- ஸ்ரீ முருகபெருமான் மற்றும் ஸ்ரீ விநாயகபெருமான் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- செவ்வாய், சனி, ராகு, கேது, குருவுக்கு பூஜை, ஹோமம் செய்து வழிபடுதல்.

# மீனம்

- தாயின் உடல் நிலையில் கவனம்தேவை.
- கௌரவம், புகழ் உயர்ந்து காணப்படும்.
- சகோதரர்களின் உறவு பலப்படும்.
- சமூக வட்டத்தில் புதிய தொடர்புகள் அதிகரிக்கும்
- தொழில் ரீதியாக உங்கள் மதிப்பை நிரூபிப்பதற்கு இது சரியான நேரம்.
- உடல்நிலை சாதாரணமாக இருக்கும்
- திறமையால் தொழிலில் புகழ், அந்தஸ்து, செல்வாக்கு உயரும்.
- உணவு கட்டுப்பாட்டிற்கு முக்கியத்துவம் அளியுங்கள்.
- .ஊதிய உயர்வு உங்களுக்குத் திருப்தியை அளிக்கும். அடிக்கடி மனம் சஞ்சலப்படும்.
- காதல் வாழ்க்கையில் கவனமாக இருக்க வேண்டும்
- காதலுக்கு தடைகள் காணப்படும். திருமணத்திற்கு ஏற்ற வரன்களைப் பெறுவீர்கள்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சுமாராகதான் இருக்கும்
- அதீதமான நம்பிக்கை காரணமாக படிப்பை கோட்டை விட்டு

## பரிகாரம்:

- திருச்செந்தூர் முருகப்பெருமான் மற்றும் ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்